1975 ஏப்ரல் 18]

* 706 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state--

(*a*) whether it is a fact that a joint sector enterprise is to be set up in Tamil Nadu for the manufacture of electronic items like Capacitors ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) கூட்டுத் துறையில் ஆரம்பிக்கப்பட்ட "தமிழ்நாடு அனைத்து நாடுகள் மின் அணுவியல் நிறுவனம்" கப்பாசிட்டர்கள் மற்றும் மின்சாரக் கருவிகள் பாகங்கள் ஆகியவற்றை சுமார் ரூ. 200 லட்சம் செலவில் உற்பத்தி செய்யும். அன்னிய தொழில்நுட்ப உதவி யுடன் இந்தத் தொழிற்சாலை ஹோசூரில் நிறுவப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : எந்த தேசத்தின் கொலாபரேஷ னுடன் ஆரம்பிக்கப்படுகிறது? அது எப்போது ஆரம்பிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பெங்களூரைச் சேர்ந்த திரு. கிருஷ்ணமூர்த்தியோடு ஒரு டீம் யூ.கே., யூரோப், கானடா போன்ற நாடுகளைப் பார்த்து வந்திருக்கிறது.

Plassy Co., Ltd., United Kingdom, Dal Electronics Corporation, U.S.A., Fly-type Ltd., Switzerland, Ceramic Capacitors. ஆகிய இந்த நான்கு நிறுவனங்களுடன் கொலாபரேஷனுக ஆரம்பிக் கப்பட இருக்கிறது.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : மின்சாரத் துறையைப் பொறுத்த வரையில் ஒரு பொதுவான குறை மெட்டீரியல்ஸ் இல்லை என்பது தான். கப்பாஸிடர்கள் இல்லாத காரணத்தினுல் பல வேலைகள் தாமதப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. ஆகவே, சீக்கிரமாக இந்தத் தொழிற்சாலையை நிறுவி கப்பாஸிட்டர்கள் தயாரிக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எவ்வளவு சீக்கிர மாக நிறுவினுலும் உடனடியாக கப்பாஸிடர்களைக் கொடுத்துவிட முடியாது.

THIRU K. M. SUBRAMANIAM: From the various answers to previous questions and the answer to the present question, it appears that this Socialist Government seems to be fond of joint sectors. Do they believe that these joint sectors should continue?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது எல்லா மாநிலங்களிலும் இருக்கிறது. இதை மத்திய சர்க்காரும் வரவேற்று இருக்கிறது. ஜாயின்ட் செக்டாரில் வைப்பதுதான் நமது கொள்கை.

திரு. நா. வீராசாமி: நமது சர்க்கார் கொள்கைப்படி இந்தத் தொழிற்சாலைகளை ஜாயின்ட் செக்டாரில் அமைக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. ஜாயின்ட் செக்டாரில் துவங்கப்படுகிற இந்தத் தொழிற்சாலையில் 90 சத விகிதம் இந்த நாட்டைச் சேர்ந்தவர் களுக்கே வேலை தரப்படவேண்டுமென்று இந்தச் சர்க்கார் ஆணை பிறப்பித்திருக்கிறதா? இல்லையென்றால் அப்படி ஆணை பிறப்பித்து இனிமேலாவது தமிழ்நாட்டில் அமைக்கப்படுகிற தொழிற்சாலை களில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கே 90 சதவீதம் வேலை தரப்படவேண்டுமென்ற உத்தரவைப் பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கெனவே இது போல அரசாங்கத்தின் சார்பாக ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக் கிறது. நம் நாட்டில் ஆரம்பிக்கப்படுகிற தொழிற்சாலைகளில் நம் நாட்டைச் சேர்ந்தவர்களுக்கே முக்கிய இடம் தரப்படவேண்டு மென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற ஜாயின்ட் செக்டார் நிறுவனங்களில் இது பின்பற்றப்பட்டு வருகிறது.

*707 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to set up a unit for the manufacture of Seamless Tubes in the joint sector in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ): தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் ஆண்டு ஒன்றுக்கு 60,000 டன்கள் பற்ற வைப்பு இல்லாத உருக்குக் குழாய்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை கூட்டுத்துறையில் அமைக்க அனுமதி கேட்டு இந்திய அரசுக்கு விண்ணப்பித்துள்ளது.